## மாமன்றக் கூட்டம்

| | | |
|---|---|---|
| **கோப்பு எண்** | - | **ந.க.எண் 10337/2018/ எம்.சி. 8 )** |
| **நாள்** | - | **22.10.2018 மாலை 5.00 மணி** |
| **தலைமை** | - | **டாக்டர் க. விஜயகார்த்திகேயன், இ.ஆ.ப.,<br>ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி,<br>கோயம்புத்தூர் மாநகராட்சி** |
| **கலந்துகொண்டோர்** | - | **துணை ஆணையர்,<br>அனைத்து துறை தலைமைகள்,<br>அனைத்து மண்டல உதவி ஆணையர்கள்** |

-----------------------------------------------------------------------------------------------------------------------

### பொருள் எண் 1

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி - சொத்துவரி பொது சீராய்வு - **A,B,C** என்று **3** மண்டலமாக மண்டல பகுப்பாய்வு **(Rationalisation of Zones)** மற்றும் மண்டல மதிப்பு சீராய்வு **(Fixation of Zonal Basic Value)** - 01.04.2018 முதல் புதிய சொத்துவரி நிர்ணயம் செய்தல் - இறுதி மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக.

**பார்வை :**

1.அரசாணை (பல்வகை) எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள். 12.11.2007.
2. மாமன்ற தீர்மானம் எண். 21 நாள்.29.05.2008.
3. அரசாணை (நிலை) எண்.114 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.25.08.2011.
4. Tamilnadu Municipal Laws (Amendment) Act, No.7 of 2012.
5. நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்.24687 /2011/ஆர்.1 நாள். 30.08.2017
6. மாமன்ற தீர்மானம் எண் 226 நாள் 16.10.2017
7. நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களது ஆய்வுக்கூட்ட குறிப்பு நாள்.15.11.2017.
8. மாமன்ற தீர்மானம் எண் 294 நாள் 01.12.2017
9. அரசாணை (நிலை) எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.07.2018
10. அரசாணை (நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.07.2018
11. நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்.20555 /2018/ஆர்.1 நாள். 20.08.2018 மற்றும் கூட்ட நடவடிக்கை குறிப்பு நாள். 21.08.2018.
12. மாமன்ற தீர்மானம் எண் 303 நாள் 24.08.2018
13. மாமன்ற தீர்மானம் எண் 348 நாள் 14.09.2018

----------

கோயம்புத்தூர் மாநகராட்சியில், 01.04.2008ல் நடைமுறைப்படுத்தப்பட்ட சொத்துவரி பொது சீராய்விற்கு பின் அடுத்த 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை அதாவது 01.04.2013ல் சொத்துவரி பொது சீராய்வு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். இது சம்பந்தமாக அரசு முடிவெடுக்காததால், பொது சீராய்வு நடைபெறவில்லை. அரசாணை (நிலை) எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.07.2018 மற்றும் அரசாணை (நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.07.2018ன்படி சொத்துவரி பொது சீராய்வு 01.04.2018 முதல் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனவும் குடியிருப்பு கட்டிடங்களுக்கு 50% மிகாமலும், குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு 100% மிகாமலும் ஏற்கனவே உள்ள சொத்துவரி விதிப்புக்களை உயர்வு செய்யப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

## தற்போது கோயம்புத்தூா் மாநகராட்சியில் நடைமுறையிலுள்ள சொத்துவரி விபரம்

கோயம்புத்தூா் மாநகராட்சியின் முந்தைய 72 வாா்டுகளிலும் (தற்போதைய 60 வாா்டுகளிலும்) சொத்துவரி கீழ்க்கண்ட விகிதங்களில் கணக்கிடப்பட்டுவருகிறது.

| I. | கட்டிடத்தின் பயன்பாடு மற்றும் அமைப்பு (மாநகரமன்ற தீா்மானம் எண். 21 நாள் 29.05.2008) | அடிப்படை கட்டணம் சதுர அடிக்கு - ரூபாய் |
|---|---|---|
| A | குடியிருப்பு | 3.50 |
| B | தொழிற்கூடம் | 7.50 |
| C | குடியிருப்பு / கடை | 10.00 |
| D | வா்த்தகம் / சிறிய அலுவலகம் | 10.00 |
| E | 'E' மருத்துவமனை/கல்யாண மண்டபம் | 10.00 |
| F | வா்த்தக அலுவலகம் | 15.00 |
| G | குடியிருப்பு & HL | 15.00 |
| H | அலுவலகம் | 15.00 |
| I | திரையரங்கம், உணவு விடுதி, தங்கும் விடுதி | 15.00 |
| J | நட்சத்திர ஓட்டல் | 33.60 |
| **II.** | **அமைவிடம்** | **கூடுதல் கட்டண சதவிகிதம்** |
| | **(1. அரசு கடிதம் எண் 2079/எம்.எல்/92-1 நாள் 04.02.1992<br>2. மாநகரமன்ற தீா்மானம் எண்.538 நாள் 24.05.1993)** | |
| A | குடியிருப்பு | 20% |
| B | தொழிற்கூடம் | 30% |
| C | குடியிருப்பு / கடை | 50% |
| D | வா்த்தகம் / சிறிய அலுவலகம் | 75% |
| **III.** | **கட்டிடத்தன்மை** | **கூடுதல் கட்டண சதவிகிதம்** |
| | **(1. அரசு கடிதம் எண் 2079/எம்.எல்/92-1 நாள் 04.02.1992** | |
| A | சிமெண்ட் சீட் | 20% |
| B | ஓட்டுக்கூரை | 20% |
| C | சிமெண்ட் கூரை, சிமெண்ட்தளம் | 50% |
| D | சிமெண்ட் கூரை, மொசைக், மாா்பிள்தளம் | 75% |
| E | சிமெண்ட் கூரை, மொசைக், மாா்பிள்தளம், குளிா்சாதனவசதி | 75% |
| **IV** | **கட்டிடத்தின் வயது** | **கூடுதல் கட்டண சதவிகிதம்** |
| | **1.அரசு கடிதம் எண் 2079/எம்.எல்/92-1 நாள் 04.02.1992** | |
| A | 31 முதல் 40 ஆண்டுகளுக்குள் | 10% |
| B | 21 முதல் 30 ஆண்டுகளுக்குள் | 20% |
| C | 11 முதல் 20 ஆண்டுகளுக்குள் | 30% |
| D | 10 ஆண்டுகளுக்குள் | 50% |

| Ward | Property Tax | Library Cess | Education Tax | Total |
|---|---|---|---|---|
| | % of Annual Value | % of Annual Value | % of Annual Value | % of Annual Value |
| Wd 01-02, 04-17 (Basic12.5%) | 12.50 | 1.25 | 2.50 | 16.25 |
| Wd 03-54, 62-72 (Basic 8.5%) | 8.50 | 0.85 | 2.50 | 11.85 |
| Wd 18-53 (Basic 15.5%) | 15.50 | 1.55 | 2.50 | 19.55 |
| Wd 54-56 (Basic 10%) | 10.00 | 1.00 | 2.50 | 13.50 |
| Wd 54 (Basic 13.5%) | 13.50 | 1.35 | 2.50 | 17.35 |
| Wd 57-61 (Basic 7.5%) | 7.50 | 0.75 | 2.50 | 10.75 |
| Wd 54, 62-64 (Basic 11.85%) | 11.85 | 1.18 | 2.50 | 15.53 |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி பழைய மாநகராட்சி பகுதிகளில் வரிவிதிப்பு செய்யப்பட்டு வருகின்றது.

அரசாணை (நிலை) எண்.114 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.25.08.2011ன்படி, கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் கூடுதலாக கீழ்க்கண்ட

1. குறிச்சி நகராட்சி,
2. குனியமுத்தூர் நகராட்சி
3. கவுண்டம்பாளையம் நகராட்சி
4. வடவள்ளி பேரூராட்சி
5. வீரகேரளம் பேரூராட்சி
6. துடியலூர் பேரூராட்சி
7. வெள்ளக்கிணறு பேரூராட்சி
8. சின்னவேடம்பட்டி பேரூராட்சி
9. சரவணம்பட்டி பேரூராட்சி
10. காளப்பட்டி பேரூராட்சி
11. விளாங்குறிச்சி ஊராட்சி

ஆகிய 11 உள்ளாட்சி அமைப்புகள் (மூன்று நகராட்சிகள், ஏழு பேரூராட்சிகள், ஓர் ஊராட்சி) இணைக்கப்பட்டு (அவை தற்போது 40 வார்டுகளாக பிரிக்கப்பட்டு) மொத்தம் 100 வார்டுகளாக எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டது.

கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட 11 உள்ளாட்சி அமைப்புகளிலும் அரசு ஆணை எண்.150, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்.12.11.2007-ன்படி A Zone, B Zone, C Zone என 3 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் 24.10.2011 வரை நடைமுறையில் இருந்த கீழ்க்கண்ட விகிதத்தில், சதுரடி ஒன்றுக்கு அடிப்படை மதிப்பு நிர்ணயிக்கப்பட்டு ஏற்கனவே உள்ள நடைமுறைகளின்படி, 01.04.2008 முதல் சொத்துவரிவிதிப்பு செய்யப்பட்டு வருகிறது.

**<u>இணைக்கப்பட்ட உள்ளாட்சி பகுதி – குறிச்சி நகராட்சி</u>**

| மண்டலம் | குடியிருப்பு | தொழிற்சாலை | வணிகம் | குறிச்சி நகர மன்ற தீர்மானம் எண் மற்றும் தேதி 83 – 24/03/2008 |
|---|---|---|---|---|
| A | 2.00 | 4.00 | 6.00 | |
| B | 1.50 | 3.00 | 4.50 | |
| C | 1.25 | 2.50 | 3.75 | |

**<u>இணைக்கப்பட்ட உள்ளாட்சி பகுதி – குனியமுத்தூர் நகராட்சி</u>**

| மண்டலம் | குடியிருப்பு | தொழிற்சாலை | வணிகம் | குனியமுத்தூர் நகர மன்ற தீர்மானம் எண் மற்றும் தேதி 22 –25/03/2008 |
|---|---|---|---|---|
| A | 1.50 | 3.00 | 4.50 | |
| B | 1.00 | 2.00 | 3.00 | |
| C | 0.75 | 1.50 | 2.25 | |

**<u>இணைக்கப்பட்ட உள்ளாட்சி பகுதி – கவுண்டம்பாளையம் நகராட்சி</u>**

| மண்டலம் | குடியிருப்பு | தொழிற்சாலை | வணிகம் | கவுண்டம்பாளையம் நகர மன்ற தீர்மானம் எண் மற்றும் தேதி 519–31/03/2008 |
|---|---|---|---|---|
| A | 1.20 | 2.40 | 3.60 | |
| B | 1.00 | 2.00 | 3.00 | |
| C | 0.80 | 1.60 | 2.40 | |

**<u>இணைக்கப்பட்ட உள்ளாட்சி பகுதி – வடவள்ளி பேரூராட்சி</u>**

| மண்டலம் | குடியிருப்பு | தொழிற்சாலை | வணிகம் | வடவள்ளி பேரூராட்சி தீர்மானம் எண் மற்றும் தேதி 40–15/07/2008 |
|---|---|---|---|---|
| A | 0.80 | 1.60 | 2.40 | |
| B | 0.70 | 1.40 | 2.10 | |
| C | 0.60 | 1.20 | 1.80 | |

**<u>இணைக்கப்பட்ட உள்ளாட்சி பகுதி – வீரகேரளம் பேரூராட்சி</u>**

<table>
<tr><td>மண்டலம்</td><td>குடியிருப்பு</td><td>தொழிற்சாலை</td><td>வணிகம்</td><td rowspan="4">வீரகேரளம் பேரூராட்சி தீர்மானம் எண் மற்றும் தேதி 71–16/07/2008</td></tr>
<tr><td>A</td><td>0.75</td><td>1.50</td><td>2.25</td></tr>
<tr><td>B</td><td>0.60</td><td>1.20</td><td>1.80</td></tr>
<tr><td>C</td><td>0.50</td><td>1.00</td><td>1.50</td></tr>
</table>

**<u>இணைக்கப்பட்ட உள்ளாட்சி பகுதி – துடியலூர் பேரூராட்சி</u>**

<table>
<tr><td>மண்டலம்</td><td>குடியிருப்பு</td><td>தொழிற்சாலை</td><td>வணிகம்</td><td rowspan="4">துடியலூர் பேரூராட்சி தீர்மானம் எண் மற்றும் தேதி 70–30/05/2008</td></tr>
<tr><td>A</td><td>0.90</td><td>1.80</td><td>2.70</td></tr>
<tr><td>B</td><td>0.75</td><td>1.50</td><td>2.25</td></tr>
<tr><td>C</td><td>0.65</td><td>1.30</td><td>1.95</td></tr>
</table>

**<u>இணைக்கப்பட்ட உள்ளாட்சி பகுதி –வெள்ளகிணறு பேரூராட்சி</u>**

<table>
<tr><td>மண்டலம்</td><td>குடியிருப்பு</td><td>தொழிற்சாலை</td><td>வணிகம்</td><td rowspan="4">வெள்ளகிணறு பேரூராட்சி தீர்மானம் எண் மற்றும் தேதி 82–29/08/2008</td></tr>
<tr><td>A</td><td>0.75</td><td>1.50</td><td>2.25</td></tr>
<tr><td>B</td><td>0.60</td><td>1.20</td><td>1.80</td></tr>
<tr><td>C</td><td>0.50</td><td>1.00</td><td>1.50</td></tr>
</table>

**<u>இணைக்கப்பட்ட உள்ளாட்சி பகுதி – சின்னவேடம்பட்டி பேரூராட்சி</u>**

<table>
<tr><td>மண்டலம்</td><td>குடியிருப்பு</td><td>தொழிற்சாலை</td><td>வணிகம்</td><td rowspan="4">சின்னவேடம்பட்டி பேரூராட்சி தீர்மானம் எண் மற்றும் தேதி 158–30/07/2008</td></tr>
<tr><td>A</td><td>0.75</td><td>1.50</td><td>2.25</td></tr>
<tr><td>B</td><td>0.60</td><td>1.20</td><td>1.80</td></tr>
<tr><td>C</td><td>0.50</td><td>1.00</td><td>1.50</td></tr>
</table>

**<u>இணைக்கப்பட்ட உள்ளாட்சி பகுதி – சரவணம்பட்டி பேரூராட்சி</u>**

<table>
<tr><td>மண்டலம்</td><td>குடியிருப்பு</td><td>தொழிற்சாலை</td><td>வணிகம்</td><td rowspan="4">சரவணம்பட்டி பேரூராட்சி தீர்மானம் எண் மற்றும் தேதி 56–04/07/2008</td></tr>
<tr><td>A</td><td>1.00</td><td>2.00</td><td>3.00</td></tr>
<tr><td>B</td><td>0.75</td><td>1.50</td><td>2.25</td></tr>
<tr><td>C</td><td>0.60</td><td>1.20</td><td>1.80</td></tr>
</table>

**<u>இணைக்கப்பட்ட உள்ளாட்சி பகுதி –காளப்பட்டி பேரூராட்சி</u>**

<table>
<tr><td>மண்டலம்</td><td>குடியிருப்பு</td><td>தொழிற்சாலை</td><td>வணிகம்</td><td rowspan="4">காளப்பட்டி பேரூராட்சி தீர்மானம் எண் மற்றும் தேதி 105–10/07/98</td></tr>
<tr><td>A</td><td>0.90</td><td>1.80</td><td>2.70</td></tr>
<tr><td>B</td><td>0.80</td><td>1.60</td><td>2.40</td></tr>
<tr><td>C</td><td>0.70</td><td>1.40</td><td>2.10</td></tr>
</table>

**<u>இணைக்கப்பட்ட உள்ளாட்சி பகுதி – விளாங்குறிச்சி ஊராட்சி</u>**

| குடியிருப்பு | வணிகம் | விளாங்குறிச்சி ஊராட்சி தீர்மானம் எண் மற்றும் தேதி |
|---|---|---|
| 0.30 | 0.45 | 91 – 23/12/97 |

பார்வை 5ல் காணும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களது சுற்றறிக்கையில், முதன்மை அரசு செயலர் அவர்கள் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுடன் புதியதாக சேர்க்கப்பட்ட பகுதிகளுக்கு, அவை இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு சமமாக சொத்துவரி விதிப்பது குறித்து பரிசீலித்து வரியினை மாற்ற வேண்டும் என தெரிவித்துள்ளார். இது தொடர்பாக பார்வை 4ல் காணும் Tamilnadu Municipal Laws (Amendment) Act No.7 of 2012ல் பின்வருமாறு புதிய விதிமுறைகள் சேர்க்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

"In act No. 7 of 2012, the following new provision has been inserted in the Tamil District Municipalities Act, 1920, the Chennai City Municipal Corporation Act, 1919, the Madurai City Corporation Act, 1971 and the Coimbatore City Municipal Corporation Act, 1981, (which is applicable to all other newly formed Corporation in the State) regarding revision of tax in the added areas;-

" Sub section (3) the respective council of urban local bodies may take decision on revision of taxes in the added areas on par with the existing rates in their Municipalities / Corporations taking into account of the improvement on the provision of basic amenities in the such areas"

அதன்படி கோயம்புத்தூா் மாநகராட்சியில் தற்போது நடைமுறையிலுள்ள சொத்துவரி கணக்கீட்டுமுறையினை தமிழ்நாட்டில் உள்ள பிற மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் கடைபிடிக்கப்படுவது போன்று தற்போதுள்ள 100 வார்டுகளிலுள்ள பகுதிகளிலும் A Zone, B Zone, C Zone மற்றும் D Zone என 4 மண்டலங்களாகப் பிரித்து மண்டலங்கள் வாரியாக வித்தியாசத்தினை போக்கி ஒரே மாதிரியாக அமைத்து (Standardization of zone) சொத்துவரி கணக்கீட்டு நடைமுறையினை கோயம்புத்தூா் மாநகராட்சியிலும் பின்வருமாறு 01.04.2018 முதல் நடைமுறைப்படுத்த மாமன்ற தீா்மானம் எண். 294 நாள். 01.12.2017ல் தீா்மானம் நிறைவேற்றப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படும் சமயத்தில், அரசாணை (நிலை) எண்.73 நகராட்சி நிா்வாகம் மற்றும் குடிநீா் வழங்கல் துறை, நாள்.19.07.2018 மற்றும் அரசாணை (நிலை) எண்.76 நகராட்சி நிா்வாகம் மற்றும் குடிநீா் வழங்கல் துறை, நாள்.26.07.2018 சொத்துவரி சீராய்வு தொடா்பாக 01.04.2018 முதல் நடைமுறைப்படுத்த அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதில், கீழ்க்கண்டவாறு சொத்துவரி பொது சீராய்வு நடைமுறைப்படுத்தப்பட உத்திரவிடப்பட்டுள்ளது.

| வ. எண். | இனங்கள் | தற்போதைய வரியுடன் உயா்வு சதவீதம் |
|---|---|---|
| 1 | குடியிருப்பு கட்டிடங்களுக்கு | 50% க்கு மிகாமல் |
| 2 | குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு | 100% க்கு மிகாமல் |
| 3 | அரசு கட்டிடங்களுக்கு | 50% க்கு மிகாமல் |
| 4 | 01.04.2017 முதல் 31.03.2018 வரை ஏற்படுத்தப்பட்ட புதிய சொத்துவரி விதிப்புகள் மற்றும் மறு அளவீடு செய்து விதிக்கப்பட்ட கட்டிடங்கள் | சொத்துவரி சீராய்வு இல்லை |

நகராட்சி நிா்வாக ஆணையாளா் அவா்களது சுற்றறிக்கை ந.க.எண்.20555/2018/ஆா்.1 நாள்.20.08.2018ல், சொத்துவரி சீராய்விற்காக தற்போதுள்ள மண்டலங்களை பகுப்பாய்வு செய்து மண்டல மதிப்பு சீராய்வு செய்யப்பட வேண்டும் எனவும் புதிய சொத்துவரி விதிப்பிற்கு மண்டலங்கள் வரையறை செய்வதன் மூலம் நிதி நிலைமையில் முன்னேற்றம் அடையும் எனவும் **A Zone, B Zone, C Zone** என மண்டலங்கள் பிரிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மேற்படி அரசானை மற்றும் நிா்வாக ஆணையரின் வழிகாட்டுதல்களில் சொத்துவரி உயா்வினால் உயா்த்தப்படும் வரிகள் கீழ்கண்ட வரம்பிற்கு நிா்ணயிக்கப்படுவதுடன், நிா்ணயிக்கப்பட்ட வரம்பு குறிப்பிட்ட அளவுக்குமேல் மிகையாகாமலும் எந்த விதத்திலும் திருத்திய வரி தற்போதைய வரியை விடக்குறைவாக இல்லாமலும் மேற்படி சீராய்வுப்பணி 24.08.2018 முதல் 24.01.2019க்குள் முடிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நகராட்சி நிா்வாக ஆணையாளா் அவா்களது வழிகாட்டுதலின் அடிப்படையில், கோயம்புத்தூா் மாநகராட்சியில் தற்போது நடைமுறையிலுள்ள சொத்துவரி கணக்கீட்டு முறையினை தமிழ்நாட்டில் உள்ள பிற மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் கடைபிடிக்கப்படுவது போன்று பேருந்து செல்லும் சாலை (Bus root road), பிரதான சாலை (Main road), பிற தெருக்கள் (Other streets) என்னும் வகைப்பாட்டின் அடிப்படையில் 1 முதல் 100 வரையிலான வாா்டுகளை மண்டலக்குழு மற்றும் பிரதான அலுவலகக் குழுக்களின் பரிந்துரையின் அடிப்படையில், A Zone, B Zone, மற்றும் C Zone என 3 மண்டலங்களாக வகைப்படுத்தி, கீழ்க்கண்டவாறு சொத்துவரி அடிப்படை மதிப்பு நிா்ணயம் செய்து 01.04.2018 முதல் வரிவிதிப்பு செய்ய பாா்வையில் 13ல் காணும் தெருக்களின் பட்டியல் உள்ளடங்கிய மாமன்ற தீா்மானம் எண்.348 நாள்.14.09.2018 மூலம் தீா்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**1. மண்டலம் (Zone )**

| | | | | |
|---|---|---|---|---|
| அ. | மண்டலம் | A | B | C |
| ஆ. | அடிப்படை மதிப்பீடு (Basic value) (சதுரடி) ரூபாயில் | 4.10 | 3.10 | 2.60 |

**2 .கட்டிடத்தின் தன்மை (Nature of Building)**

| | | |
|---|---|---|
| அ. | சிமெண்ட் கான்கிரீட் கூரை (RCC Building) | மதிப்பிறக்கம் இல்லை (No discount) |
| ஆ. | ஓட்டுக்கூரை (Tiled), சிமெண்ட் கூரை (AC Sheet) தகரம் கூரை (GI Sheet) | 25% |
| இ. | கீற்றுக் கூரை (Thatched Roof) | 50% |

**3. கட்டிடத்தின் பயன்பாடு (Use of Building)**

| | | |
|---|---|---|
| அ. | சிமெண்ட் கூரை குடியிருப்பு கட்டிடம் (RCC residential building) | அடிப்படை மதிப்பு (basic value) |
| ஆ. | அரசு கல்வி நிறுவனங்கள், மாநகராட்சி கல்வி நிறுவனங்கள், அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் அவை சார்ந்த விடுதிகள், நூலகங்கள் மற்றும் விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களை தவிர்த்து, கல்வி பயன்பாட்டிற்கான கட்டிடங்கள் உட்பட ஏனைய கட்டிடங்கள் மற்றும் அரசின் உதவி பெற்று சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் அனைத்து கல்வி நிறுவன கட்டிடங்கள் (Education Inustitional Buildings) | அடிப்படை மதிப்பில் 1.5 மடங்கு (1.5 times of the basic value) |
| இ. | தொழிற்சாலை உபயோகக்கட்டிடம் ( building for Industrial use ) | அடிப்படை மதிப்பில் 2 மடங்கு (Double the basic value) |
| ஈ. | வணிக உபயோகம் (Commercial use of including nurshing home etc., kalyana mandapam etc., building) - வர்த்தகம், மருத்துவமனை, கல்யாணமண்டபம் போன்றவை உள்ளிட்டது. | அடிப்படை மதிப்பில் 3 மடங்கு (Thrice the basic value) |
| உ. | கலை / விளையாட்டு பூங்காக்கள் (theme parks), பலமாடி கட்டிடங்கள், (multi plexes,) விற்பனை கூடங்கள் (shopping malls), குளிர்சாதன வசதியுடன் கூடிய திருமண மண்டபங்கள் (air conditioned wedding halls), உயர் சிறப்பு மருத்துவ மனைகள் (super speciality hospitals) போன்றவை etc., | அடிப்படை மதிப்பில் 4 மடங்கு (Four Times of the basic value) |
| ஊ. | வாடகை பெறக்கூடிய விளம்பரப்பலகைகள் மற்றும் தொலை தொடர்பு கோபுரங்கள் (the hoardings and communication towers fetching rent may be treated as commercial building) இவற்றினை வரிவிதிப்பு செய்ய அரசு தெளிவுரையின்படி தனியே அறிவிக்கப்படும் (regarding assessing of hoarding and communication towers the modality of assessing them will be informed separately as per Government Clarifications) | |
| எ. | நட்சத்திர ஓட்டல் (Star Hotel) | அடிப்படை மதிப்பில் 6 மடங்கு (Six Times of the basic value) |

**4- கட்டிடத்தின் வயது அடிப்படையில் தேய்மான கழிவு**
(Discount for depreciation depending on the Age of Building)

| | | |
|---|---|---|
| **1** | 5 ஆண்டுகள் வரை | தேய்மான கழிவு இல்லை (No discount) |
| **2** | 5 ஆண்டிற்கு மேல் 15 ஆண்டுக்குள் | 10% |
| **3** | 15 ஆண்டுக்கு மேல் 25 ஆண்டுக்குள் | 15% |
| **4** | 25 ஆண்டுக்கு மேல் | 20% |

**5. குடியிருப்பு கட்டிடங்களுக்கு ஆண்டு மதிப்பில் 40% தள்ளுபடி**
(40% on Discount on Annual Value of Residential Building)

கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளான (கிராம ஊராட்சி முதல் சிறப்பு நிலை நகராட்சி வரை) பல்வேறு வகையிலான ஏற்றத்தாழ்வுகளுடன் கூடிய வரிவிதிப்பு முறை பின்பற்றப்பட்டு வந்ததை தற்போது ஒரே சீரான சொத்துவரி கணக்கீட்டுமுறையினை தமிழ்நாட்டில் உள்ள பிற மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் கடைபிடிக்கப்படுவது போன்று, தற்போதுள்ள 100 வார்டுகளிலுள்ள பகுதிகளிலும் A Zone, B Zone மற்றும் C Zone என 3 மண்டலங்களாக மண்டல பகுப்பாய்வு செய்தும் **(Rationalisation of Zones)** மற்றும் மண்டல மதிப்பு சீராய்வு **(Fixation of Zonal Basic Value)** செய்து வித்தியாசத்தினை போக்கி ஒரே மாதிரியாக அமைத்து சொத்துவரி கணக்கீட்டு நடைமுறையினை அமல்படுத்துவதால், ஒரு சில பகுதிகளில் ஏற்படும் அபரிவிதமான வரிஉயர்வினை தவிர்க்கும்பொருட்டு, குடியிருப்பு கட்டிடங்களுக்கு மட்டும் ஆண்டு மதிப்பில் 40% தள்ளுபடி வழங்கவும் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**6. வார்டு 1 முதல் 100 வரை நிர்ணயம் செய்யப்படும் சொத்துவரி விதிப்பு சதவிகிதம் (ஆண்டு மதிப்பில்) (Levy of Property Tax % in Annual Value)**

| | | |
|---|---|---|
| 1 | பொது பயன்பாட்டு வரி | 10.50% |
| 2 | கல்வி வரி | 2.50% |
| 3 | நூலகவரி 10% (பொது பயன்பாட்டு வரி மீது ) | 1.05% |
| | **மொத்த வரி விகிதம் (ஆண்டு மதிப்பில்)** | **14.05%** |

**A,B,C** என்று 3 மண்டலமாக மண்டல பகுப்பாய்வு **(Rationalisation of Zones)** மற்றும் மண்டல மதிப்பு சீராய்வுகள் **(Fixation of Zonal Basic Value)** செய்யப்பட்டும், உரிய சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டும், மாமன்ற தீர்மானம் எண்.348 நாள்.14.09.2018ல் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேற்கண்ட மாமன்ற தீர்மானத்தின் அடிப்படையில், பொதுமக்களின் ஆட்சேபணைகள் ஏதுமிருப்பின் அதனை தெரிவிக்க கோரி அதற்கான அறிவிக்கையினை 21.09.2018 உள்ளூர் தமிழ் செய்தி தாள்களில் அறிவிப்புகள் வெளிப்பட்டுள்ளன.

மேற்படி, 21.09.2018 அன்று செய்திதாள்களில் வெளியிடப்பட்ட அறிவிப்புக்களை தொடர்ந்து,

1. 01.10.2018 அன்று திரு.மு.கிருட்டிணசாமி, முன்னாள் மாமன்ற உறுப்பினர், மாநில தீர்மானக்குழு உறுப்பினர், மறுமலர்ச்சி தி.மு.கழகம், அவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ள ஆட்சேபணை கடிதத்தில், அடிப்படை வசதி பணிகள் எதுவும் முடிக்கப்பெறாத நிலையிலுள்ளதாகவும், மேலும் மக்கள் பிரதிநிதிகள் முடிவுசெய்யும் வரை சொத்துவரி பொதுச் சீராய்வு குறித்த மாமன்ற தீர்மானம் எண். 348 நாள்.14.09.2018னை ரத்து செய்யக் கோரி ஆட்சேபணை தெரிவித்துள்ளார்.

2. 03.10.2018 அன்று **WELFARE PARTY OF INDIA** என்ற கட்சியின் மாவட்ட தலைவர், திரு. கே.எஸ். அப்துல் ரஹ்மான் என்பவரிடமிருந்து பெறப்பட்ட ஆட்சேபணை கடிதத்தில், மேற்கொள்ளப்படும் சொத்துவரி பொதுச் சீராய்வினால், வீடு, வியாபார நிறுவனங்களின் வாடகையும் கணிசமாக உயர்வதற்கு வாய்ப்புள்ளது எனவும் அதனால் மேற்படி சொத்துவரி சீராய்வினை ரத்து செய்யவும் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

3. 01.10.2018 அன்று திரு.பெ.முருகேசன், தலைமை செயற்குழு உறுப்பினர், மறுமலர்ச்சி தி.மு.கழகம் அவர்களின் ஆட்சேபணை கடிதத்தில், 30 ஆண்டுகளுக்கும் மேலாக உள்ள லே-அவுட்களில் அடிப்படை வசதி பணிகள் எதுவும் செய்யப்படாமல் உள்ளன என கோரி புதிய வரிவிதிப்பினை ஒத்தி வைக்குமாறு ஆட்சேபணை தெரிவித்துள்ளார்.

4. 17.10.2018 அன்று திரு.ப.ரகுபதி, 36வது வார்டு முன்னாள் மாமன்ற உறுப்பினர், அவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ள ஆட்சேபணை கடிதத்தில், சித்ரா ரோடு பகுதியில் அதிகமாக குடியிருப்புகள் உள்ளதாகவும், ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்ட சித்ரா ரோடு பகுதியினை **A** மண்டலத்தில் உள்ளன. அந்த பகுதியில் மக்கள் அதிகமாக வாழும் குடியிருப்பு பகுதியாக உள்ளதால், வரிவிதிப்புதொகை அதிகமாகிவிடும். எனவே சித்ரா ரோடு பகுதியினை **B** மண்டலத்தில் சேர்க்குமாறு ஆட்சேபணை தெரிவித்துள்ளார்.

சொத்துவரி பொது சீராய்வு தொடர்பாக மேற்குறிப்பிட்டுள்ளபடி 4 ஆட்சேபணைகள் பெறப்பட்டுள்ளன. அவைகளில் வரிசை எண்.1ல் திரு.மு.கிருட்டிணசாமி, அவர்களிடமிருந்தும் வரிசை எண்.3ல் திரு.பெ.முருகேசன், அவர்களிடமிருந்தும் பெறப்பட்டுள்ள ஆட்சேபணை கடிதங்களில், மாநகராட்சிப் பகுதிகளில் அடிப்படை வசதி பணிகள் எதுவும் முடிக்கப்பெறாத நிலையிலும், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் இல்லாத நிலையிலும், சொத்துவரி சீராய்வு நடைமுறைப்படுத்தப்படுவதை ரத்து செய்யுமாறு ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளன. இம்மாநகராட்சியில், அவ்வப்போது, தொடர்ந்து அனைத்து விதமான அடிப்படை வசதி பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாலும் மற்றும் பிறப்பிக்கப்பட்டுள்ள அரசாணையின் அடிப்படையில் மாமன்ற அனுமதி பெற்று, சொத்துவரி பொதுச் சீராய்வு நடைமுறைப்படுத்தப்படுவதாலும், மேற்காணும் ஆட்சேபணைகளை ஏற்க இயலாது.

வரிசை எண்.2ல் **WELFARE PARTY OF INDIA** கட்சியின் மாவட்ட தலைவர், திரு.கே.எஸ். அப்துல் ரஹ்மான் என்பவரின் ஆட்சேபணை கடிதத்தில், சொத்துவரி சீராய்வினால் வீடு, வியாபார நிறுவனங்களின வாடகையும் கணிசமாக உயர்வதற்கு வாய்ப்புள்ளது எனவும் அதனால் மேற்படி சொத்துவரி சீராய்வினை ரத்து செய்யவும் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த சொத்துவரி பொது சீராய்வானது 10 ஆண்டுகளுக்குப்பின், பிறப்பிக்கப்பட்டுள்ள அரசாணையின் அடிப்படையில் மாமன்ற அனுமதி பெற்று, நடைபெறும் சொத்துவரி பொது சீராய்வு ஆகும். மேலும் இந்த பொதுச் சீராய்வு, இம்மாநகராட்சிக்கு மட்டுமன்றி அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் நடைபெறும் பொது சீராய்வாகவும், அரசின் கொள்கை முடிவாகவும் (**POLICY DECISION**) உள்ளதால், மேற்காணும் ஆட்சேபணைகளை ஏற்க இயலாது.

வரிசை எண்.4ல் திரு.ப.ரகுபதி, 36வது வார்டு முன்னாள் மாமன்ற உறுப்பினர், அவர்களின் ஆட்சேபணை கடிதத்தில், சித்ரா ரோடு பகுதியில் அதிகமாக குடியிருப்புகள் உள்ளதாகவும், ஏற்கனவே **A** மண்டலமாக நிர்ணயம் செய்யப்பட்ட சித்ரா ரோடு பகுதியினை மக்கள் அதிகமாக வாழும் குடியிருப்பு பகுதியாக உள்ளதால், வரிவிதிப்புதொகை அதிகமாகிவிடும் என்ற ஆட்சேபணையை பரிசீலனை செய்யப்பட்டு, சித்ரா ரோடு பகுதியினை **B** மண்டலத்தில் சேர்க்கலாம்.

மேலும், 14.09.2018 அன்று நிறைவேற்றப்பட்ட மாமன்ற தீர்மானம் எண்.348ன்படி, ஏற்கனவே உள்ள வரிவிதிப்பு செய்யப்பட்ட கட்டிடங்களுக்கு, அரசாணை (நிலை) எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.07.2018 மற்றும் அரசாணை (நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.07.2018ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, குடியிருப்பு கட்டிடங்களுக்கு 50 சதவிகிதத்திற்கு மிகாமலும், குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு 100 சதவிகிதத்திற்கு மிகாமலும், 01.04.2018 முதல் சொத்துவரி பொது சீராய்வு செய்யவும் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்.20555 /2018/ஆர்.1 நாள்.20.08.2018 மற்றும் கூட்ட நடவடிக்கை குறிப்பு நாள்.21.08.2018ன்படி, நிர்ணயம் செய்யப்பட்டுள்ள மண்டல பகுப்பாய்வு மற்றும் மண்டல அடிப்படை மதிப்பின்படியும், புதிய சொத்துவரி விதிக்க இறுதி உத்திரவு வேண்டியும், இதனை மாவட்ட அரசிதழில் வெளியிடவும் மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்.6943/2018/எம்.ஏ1

---

## பொருள் எண் 2

பொருள் : பொதுக் கணக்குப் பிரிவு - காலாவதியான வைப்புத் தொகைகளை திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிக் கேட்டல் - தொடர்பாக

பார்வை : அரசாணை எண். எம் எஸ். 621 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை நாள். 08.04.1980

******

பார்வையில் காணும் அரசாணையின் படி, ஒரு வைப்புத் தொகையானது அத்தொகை செலுத்தப்பட்ட நாளிலிருந்து 3 ஆண்டு காலமும், பிடித்தம் செய்யப்பட்ட 5 % பிடித்த தொகையானது, பணி முடிக்கப்பட்ட நாளிலிருந்து 3 வருடங்கள் முடிவதற்குள் திரும்ப வழங்கப்பட்ட வேண்டும். அப்படி வழங்கபடவில்லை எனில் மேற்படி காலம் முடிவறும் நிலையில் காலாவதியாகிறது. காலாவதியான வைப்புத் தொகைகளை (கணக்கு எண்.1074) காலாவதி பேரேட்டிற்கு கொண்டு செல்லப்பட்டு பின்னா் மன்றத்தின் அனுமதி பெற்று வழங்கபட வேண்டும் என்பதாகும்.

எனவே கீழ்க்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு, ஒப்பந்தாரா் தி/ள் ஏ.எஸ் பில்டா்ஸ் பல்வேறு பணிகள் செய்து முடிக்கப்பட்டு, மேலும் இப்பணி சம்பந்தமான தணிக்கை தடை எதுவுமில்லை. எனவே அப்பணிகளில் செலவினப் பட்டியல் தொகையில் பிடித்தம் செய்யப்பட்ட 5% வைப்புத் தொகைகள் மேற்படி காலம் முடிவுற்று காலாவதியாகிவிட்டது. மேலும் பணிகள் விவரம் பின்வருமாறு :

| S. No | BPV No / DDNo. | Name of the work | M.Book No / File No | Work completion / Tender Deposit Dated | Fund Details | WH Amount 5 % / Deposit amount | WH Expiry Date |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 76 / 10.04.2014 | வாா்டு எண். 19க்குட்பட்ட மாகாளியம்மன் கோவில் பகுதியில் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைத்தல் | 2187/13-14 | 10.10.2014 | Capatial Fund | 13272/- | 10.10.14 |
| | Withheld | | 294/14/D1(W) | | | | |
| 2. | 1264/19.02 .2015 | வாா்டு எண். 26க்குட்பட்ட அம்மாசைய கவுண்டா் வீதியில் ஆண்கள் கழிப்பிடம் கட்டுதல் | 2739/15-16 | 26.09.2016 | Revenue Fund | 15000/- | 26.09.16 |
| | **EMD-**<br>DD.No. 013434<br>AXIS Bank | | 7574/14/MD2 | | | | |

மேற்படி வரிசை எண்.1 முதல் 2 வரை உள்ள இனங்களை ஒப்பந்ததாரா்களுக்கு திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் ஒப்புதலுக்காக சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். (ந.க.எண். 294/14/D1(W) )

---

## பொருள் எண் 3

**பொருள்:** கோயம்புத்துார் மாநகராட்சி – வடக்கு மண்டலம் - வாா்டு எண் 41க்குட்பட்ட கணபதி இராமகிருஷ்ணாபுரம் மாநகராட்சி நடுநிலைப்பள்ளியிலுள்ள பழுதடைந்து உபயோகமற்ற பள்ளி வகுப்பறை கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்துவது – அனுமதி வேண்டுதல்- சம்பந்தமாக,

**பாா்வை:** தலைமை ஆசிரியா் அவா்ளின் விண்ணப்ப நாள்.20.09.2018.

கோயம்புத்துார் மாநகராட்சி வடக்கு மண்டலம் வாா்டு எண்.41க்குட்பட்ட கணபதி இராமகிருஷ்ணாபுரம் பகுதியில் மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் 252 மாணவா்களுடன் செயல்பட்டு வருகின்றது. இப்பள்ளியிலுள்ள ஒரு பகுதி பள்ளி வகுப்பறை கட்டிடம் மிகவும் பழுதடைந்து உபயோகமற்று பயன்படுத்த முடியாமல் உள்ளது.

மேற்படி கட்டிடம் சுமாா் 25 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட பள்ளி வகுப்பறை உள்கட்டமைப்பில் மிகவும் பழுது ஏற்பட்டு இடிந்து விழும் நிலையில் இருந்ததால் மாணவா்களுக்கு வகுப்புகள் நடத்த முடியாமல் வகுப்பறை பற்றாக்குறை ஏற்பட்டதை அடுத்து இக்கட்டிடத்திற்கு மாற்றாக அருகிலுள்ள கட்டிடத்தில் முதல்தளம் புதிதாக கட்டப்பட்டு வகுப்புகள் செயல்பட்டு வருகிறது. மேலும் இக்கட்டிடத்தை சரி செய்து மீண்டும் பயன்படுத்த இயலாது.

எனவே கணபதி இராமகிருஷ்ணாபுரம் பகுதியில் மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் மிகவும் பழுதடைந்து உபயோகமற்று பயன்படுத்த முடியாமல் உள்ள மாநகராட்சி பள்ளி வகுப்பறை கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்த அனுமதி வேண்டி பணிந்து சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- அனுமதிக்கலாம் ந.க.எண்.2683/18/எம்.டி.2

---

## பொருள் எண் 4

கோயம்புத்தூா் மாநகராட்சி கிழக்குமண்டலம் வாா்டு எண்.35மற்றும் 36க்கு உட்பட்ட பகுதியில் கீழ்கண்ட பணிகளுக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம்,

| வ.எ | வா.எ | வேலையின் பெயா் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1. | 35 | **வாா்டு எண் 35–க்குட்பட்ட** பழுதடைந்துள்ள சாலைகளுக்கு தாா் பேட்ச் அமைத்தல் ந.க.எண்: 10256 /18/எம்.டி3 | 8.80 |
| 2. | 36 | **வாா்டு எண் 36–க்குட்பட்ட** பழுதடைந்துள்ள சாலைகளுக்கு தாா் பேட்ச் அமைத்தல் ந.க.எண்: 10257 /18/எம்.டி3 | 9.60 |

மேற்படி பணிகளுக்கு நிா்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண்:- 10256/2018/எம்டி3

---

## பொருள் எண் 5

கோவை மாவட்ட ஆட்சிதலைவா் அவா்கள் தலைமையில் கடந்த 5-10-2018 அன்று நடைபெற்ற கூட்டத்தில் கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலம் வாா்டு எண் 35க்கு உட்பட்ட அவினாசி சாலை முதல் விமான நிலையம் சிறுபாலம் வரை உள்ள கால்வாயினை சுத்தம் செய்து இரும்பு தடுப்புகள்(GRILL) அமைத்து இக்கால்வாயில் வரும் குப்பைகளை தடுத்து விமான நிலைய வளாகத்திற்குள் செல்லாமல் இருக்க உடனடியாக பணிகளை மேற்கொள்ள மாவட்ட ஆட்சிதலைவா் அவா்கள் உத்திரவிட்டதையடுத்து இப்பணிக்கு மதிப்பீடு ரூ4,96,000/- தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே இப்பணிக்கு மன்றத்தின் நிா்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண்:- 10258 /2018/எம்டி3

---

## பொருள் எண் 6

கோயம்புத்தூா் மாநகராட்சி கிழக்குமண்டலம் வாா்டு எண்.36க்கு உட்பட்ட பகுதியில் கீழ்கண்ட பணிக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம்,

| வ.எ | வா.எ | வேலையின் பெயா் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1. | 36 | **வாா்டு எண் 36–க்குட்பட்ட** பூங்கா நகா், பிருந்தாவன் நகா்,மற்றும் வித்யா நகா் பகுதியில் உள்ள வடிகால்களில் தூா்வாாி அப்புறபடுத்துதல் ந.க.எண்: 10259 /18/எம்.டி3 | 3.80 |

மேற்படி பணிக்கு நிா்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண்:- 10259/2018/எம்டி3

---

## பொருள் எண் 7

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண். 17 & 18 க்குட்பட்ட பகுதிகளில் புதிய தார்சாலை அமைத்தல் பணிக்கு மதிப்பீடு தயார் செய்து மேற்படி பணியை விரைந்து செய்து முடிக்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களால் உத்திரவிடப்பட்டதற்கிணங்க கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு-

| வ.எண் | வா.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 17 & 18 | 17 & 18 க்குட்பட்ட பூபதிராஜா நகர் பகுதியில் புதிய தார்சாலை அமைத்தல்<br>ந.க.எண்: 10228 /18/எம்.டி2 | 17.00 |

மேற்படி பபட்டியலில் குறிக்கப்பட்டுள்ள பணிகளுக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண்:- 10228/2018/எம்டி2

---

## பொருள் எண் 8

ஜவஹர்லால் நேரு தேசிய புனரமைப்பு திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கென அர்ப்பணிக்கப்பட்ட பில்லூர் இரண்டாவது குடிநீர் வழங்கல் திட்டப்பணியின் கீழ் பில்லூர் அணை பகுதியில் ஒரு தலைமை நீரேற்று நிலையம் நிறுவப்பட்டு அனுதினமும் சுமார் **135** மில்லியன் லட்சம் லிட்டர் அளவிலான சுத்திகரிப்பு செய்யப்படாத குடிநீர் வெள்ளியங்காடு பகுதியில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு நீரேற்றுக்குழாய்கள் மூலம் கொண்டு வரப்பட்டு சுத்திகரிப்பு செய்யப்பட்டு மாநகராட்சி பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி தலைமை நீரேற்று நிலையத்திற்கான வருடாந்திர இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளுக்கான தற்போதைய ஒப்பந்தம் வரும் **31.10.2018** அன்றுடன் முடிவடைகிறது. அடுத்து வரும் **01.11.2018** முதல் ஓராண்டு காலத்திற்கான வருடாந்திர இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு ரூ. **48.00** இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மாமன்றம் தீர்மான எண் **330**, நாள் **14.09.2018**ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, **10.10.2018** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் கீழ்க்கண்ட நிறுவனங்கள் கலந்து கொண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | வேலையின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய தொகை | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| **1** | பில்லூர் இரண்டாவது தலைமை நீரேற்று நிலையத்தை ஒரு வருட காலம் (மோட்டார் பம்பு செட்டுகள், டிரான்ஸ்பார்மர்கள், மின் இயந்திரங்களை இயக்கவும், குடிநீர் தலைமை நிலையத்தை பராமரிக்கும் பணி) இயக்கம் மற்றும் பராமரிப்பு பணி. | ரூ. **46,63,097/–** | **1.** தி/ள். எஸ் . ஆர்.வி அசோசியேட்ஸ், ஓமலூர், சேலம் | ரூ. **52,08,560/–** | மதிப்பீட்டு தொகைக்கு **11.70%** அதிகம் |
| | | | **2.** தி/ள். ஜே எஸ் அசோசியேட்ஸ் டெவலப்மெண்ட் இந்தியா பிரைவேட் லிமிடெட், கோயம்புத்தூர். | ரூ. **49,42,784/–** | மதிப்பீட்டு தொகைக்கு **6.00** % அதிகம் |
| | | | | **ரூ. 48,89,024 /– (விலை குறைப்பிற்கு பின்னர்)** | **விலை குறைப்பிற்கு பின்னர் மதிப்பீட்டு தொகைக்கு 4.84 % அதிகம்** |

விலைகுறைப்பிற்குப் பின்னர் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்திருந்த ஒப்பந்ததாரர் தி/ள். ஜே எஸ் அசோசியேட்ஸ் டெவலப்மெண்ட் இந்தியா பிரைவேட் லிமிடெட், கோயம்புத்தூர் அவர்களது ஒப்பந்தபுள்ளியினை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதி வழங்கலாம் ந.க.எண். **8020 / 2018 /** ஜே. என்.**5**

---

## பொருள் எண் 9

கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஜவஹர்லால்நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் (JNNURM) கீழ் பாதாள சாக்கடை திட்டத்தினை செயல்படுத்த ரூ. 377.13 கோடி மதிப்பில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி3) துறையின் அரசாணை ( 3 டி ) எண் 25, நாள்: 24.10.2007–ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இதில் சிப்பம் –IV பணியாக மேற்கொள்ளப்பட்ட உக்கடம் பகுதியில் 70 எம்.எல்.டி. கொள்ளளவு கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி தி/ள். கார்புரே இஞ்சினியரிங் & கன்ஸ்ட்ரக்சன்ஸ், பி,லிட்., புனே (M/s. GHARPURE ENGG & CONST (P) LIMITED, PUNE) என்ற நிறுவனத்தால் கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டது. இக்கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிக்கு மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டு, இயக்கம் மற்றும் பராமரிப்பு பணியினை கடந்த ஐந்தாண்டுகளாக மேற்படி நிறுவனமே மேற்கொண்டு வந்தது. இந்நிறுவனத்தின் ஒப்பந்த பணிகாலம் கடந்த 07.05.2017–ல் முடிவடைந்துள்ளது.

எனவே, உக்கடம் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் இரண்டாம் கட்ட இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள அரசின் அனுமதிக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு, கடந்த 03.08.2018–ந்தேதிய நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது கடித ந.க. எண். 27454/2017/UGSS-1–ல், ஓராண்டுக்கு ரூ. 2.43 கோடிக்கு பணிஅனுமதி வழங்கியும், மேலும் ஒப்பந்த நிறுவனத்தின் செயல்பாட்டின் அடிப்படையில் வருடாந்திர பராமரிப்பு கட்டணத்தை ஆண்டுக்கு 5% சதவீதம் உயர்த்தி அடுத்து வரும் இரு ஆண்டுகளுக்கு ஒப்பந்த நீட்டிப்பு செய்யலாம் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே இயக்கம் மற்றும் பராமரிப்பு பணியை ஓராண்டுக்கு மேற்கொள்ள புதியதாக ஒப்பந்தப்புள்ளிகள் கடந்த 14.09.2018–ந் தேதி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு நிறுவனங்கள் கலந்து கொண்டது.

1. திரு/ள். எஸ்.ஆர்.வி அசோசியேட்ஸ், சேலம்.
2. திரு/ள். ஜே.எஸ். அசோசியேட் டெவலப்மெண்ட் இண்டியா பிரைவேட் லிட், கோவை.

மேற்கண்ட நிறுவனங்களில் 1–ம் இலக்கமிட்ட நிறுவனம் தொழில்நுட்ப ரீதியாக (Technical Qualification) தகுதி பெறாததால் 2–ம் இலக்கமிட்ட நிறுவனத்தின் விலைப்புள்ளி மட்டும் கடந்த 05.10.2018–ல் திறக்கப்பட்டது. ஒப்புநோக்கு பட்டியலின் விபரம் கீழ்கண்டவாறு:

| வ. எண். | நிறுவனம் | ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்த விலை புள்ளி விபரம் / திறப்பு நாள் | விலை குறைப்பு கடிதம் அளித்த நாள் | ஒப்பந்த விலை புள்ளி விபரம் (விலைகுறைப்பிற்கு பின்னர்) | ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு (அதிகம்) |
|---|---|---|---|---|---|---|
| 01 | திரு/ள். ஜே.எஸ். அசோசியேட் டெவலப்மெண்ட் இண்டியா பிரைவேட் லிட், கோவை. | ரூ.2,43,00,000/– | ரூ. 2,58,12,000/– நாள்: 05.10.2018 | **12.10.2018** | **ரூ.2,54,88,000/–** | + 6.22 % விலை குறைப்புக்கு பின் + 4.89% |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு மதிப்பீட்டுத் தொகையை விட 4.89% அதிக விலைப்புள்ளி அளித்த திரு/ள். ஜே.எஸ். அசோசியேட் டெவலப்மெண்ட் இண்டியா பிரைவேட் லிட், கோவை நிறுவனத்தை ஏற்கவும், ரூ. 2,54,88,000/–க்கு (ரூபாய் இரண்டு கோடியே ஐம்பத்து நான்கு இலட்சத்து எண்பத்து எட்டாயிரம் மட்டும்) ஒப்புதல் அளிக்கவும் மேற்படி நிறுவனத்திற்கு பணியுத்தரவு வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

இப்பணியினை மாநகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக்குறிப்பு :

அ) உக்கடம் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் இரண்டாம் கட்ட இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளை ஓராண்டு காலத்திற்கு மேற்கொள்ள மதிப்பீட்டுத்தொகையை விட 4.89% அதிக விலைப்புள்ளி அளித்த திரு/ள். ஜே.எஸ். அசோசியேட் டெவலப்மெண்ட் இண்டியா பிரைவேட் லிட், கோவை நிறுவனத்தை ஏற்கலாம்.

ஆ) மேற்படி பணிக்கு செலவாகும் உத்தேசமாக ரூ. 2.54 கோடி தொகையினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி வழங்கலாம்.

ந.க. எண். 9661/2017/ஜோன்4

---

## பொருள் எண் 10

கடந்த **04.04.2018** அன்று நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் சென்னையில் நடத்தப்பட்ட திடக்கழிவு மேலாண்மை தொடர்பான ஆய்வு கூட்டத்தில் கோயம்புதூர் மாநகராட்சி வார்டுகளிலுள்ள குடியிருப்புகளில் சேகரமாகும் மக்கும் கழிவுகளை அதே வார்டுகளிலுள்ள பொது ஒதுக்கீடு இடத்தில் புதியதாக மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர்களை (Micro Composting Centers) நிறுவி அவற்றில் பொது மக்களின் முழு பங்களிப்புடன் பரவலாக்கப்பட்ட திடக்கழிவு மேலாண்மை (Decentralized Solid Waste Management) முறையில் மேற்படி சேகரமாகும் மக்கும் கழிவுகளை உரமாக மாற்றியமைக்க திட்டமிட உத்திரவிட்டதுடன் மண்டலத்திற்கு ஒரு மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர் மற்றும் அம்ரூட், ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் பூங்காக்களில் ஆன் சைட் கம்போஸ்டிங் சென்டர்களை அமைக்கவும் உத்திரவிட்டார். நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் உத்திரவின் பேரில் கீழ்கண்ட பட்டியலில் குறிப்பிட்டுள்ள பகுதிகளில் புதியதாக மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர்கள் மற்றும் ஆன் சைட் கம்போஸ்டிங் சென்டர்களை நிறுவுதல் பணிகளுக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ஆணையர் மற்றும் தனி அதிகாரி அவர்களது நிர்வாக அனுமதி பெறப்பட்டு, **12.09.2018** மற்றும் **17.09.2018** ஆகிய தேதிகளில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. அதில் கீழ்க்கண்ட நிறுவனங்கள் கலந்து கொண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | வேலையின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய தொகை | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 1 | வார்டு எண். 9 கவுண்டம்பாளையம் பகுதியில் உள்ள பழைய குப்பைக் கிடங்கு வளாகத்தில் இடத்தில் 5 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர் நிறுவுதல் (ந.க.எண். 6997 / 2018 / ஜே. என்.5) | ரூ. 66,44,928/– | 1. திரு. க்ளின் சிட்டிஸ் பவுண்டேஷன், கோயம்புத்தூர். | ரூ. 76,32,444/– | மதிப்பீட்டு தொகைக்கு 14.86% அதிகம் |
| | | | 2. திரு. டாய்லெட் ஃபர்ஸ்ட், கோயம்புத்தூர். | ரூ. 72,93,644/– | மதிப்பீட்டு தொகைக்கு 9.76 % அதிகம் |
| | | | | **ரூ. 68,65,783 /– (விலை குறைப்பிற்கு பின்னர்)** | **விலை குறைப்பிற்கு பின்னர் மதிப்பீட்டு தொகைக்கு 3.32 % அதிகம்** |
| 2 | வார்டு எண். 90 கோவைப்புதூர் Q-பிளாக் (பேஸ்–III) பகுதியிலுள்ள பொது ஒதுக்கீடு இடத்தில் 5 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மைக்ரோ கம்போஸ்டிங் சென்டர் நிறுவுதல் (ந.க.எண். 6998 / 2018 / ஜே. என்.5) | ரூ. 66,44,928/– | 1. திரு. க்ளின் சிட்டிஸ் பவுண்டேஷன், கோயம்புத்தூர். | ரூ. 76,29,644/– | மதிப்பீட்டு தொகைக்கு 14.82 % அதிகம் |
